வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 05 08.06.2024 சனிக்கிழமை இதழ் : 160 பக்கங்கள் : 12




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# ஜனாதிபதி ரணிலும் சஜித்தும் விரைவில் சந்திக்க ஏற்பாடு?

கொழும்பு, ஜூன் 08

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவும் விரைவில் சந்தித்துப் பேச்சு நடத்துவர் என்று தெரிய வருகின்றது. இதற்கான ஏற்பாடுகள் இரகசியமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அறிய வருகின்றது.**

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை ஐக்கிய தேசியக் கட்சியும் ஐக்கிய மக்கள் சக்தியும் கூட்டணியாக சந்திப்பது தொடர்பில் பூர்வாங்க பேச்சுகள் ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டன. இது குறித்த பேச்சுகள் சிங்கப்பூரில் முன்னெடுக்கப்படுகின்றன என்று ஏற்கனவே கொழும்பு அரசியல் உயர்வட்டாரங்களில் பேச்சுகள் அடிபட்டன.




இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியுடன் முன்னெடுக்கப்படும் பேச்சு தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் ரவி கருணாநாயக்கா, அந்தக் கட்சியின் இரண்டாம் மட்டத் தலைவர்களுடனான

11

# இந்திய பிரதமர் மோடிக்கு இலங்கை வருமாறு அழைப்பு

## ஜனாதிபதி ரணில் நேரில் விடுப்பார்

கொழும்பு, ஜூன் 08



இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடியை இலங்கைக்கு வருகை தருமாறு அழைப்பு விடுப்பார் என்று தெரிய வருகின்றது.

இந்தியாவின் பிரதமராக மூன்றாவது முறையாக நரேந்திர மோடி நாளை ஞாயிற்றுக்கிழமை பதவியேற்கிறார். இந்த நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லி செல்கிறார்.

இதன்போது, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புது டில்லியில் பிரதமர் நரேந்திர மோடி உட்பட

11

# 17ஆம் திகதி ஹஜ் பெருநாள்!

கொழும்பு, ஜூன் 08

துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறை நேற்று தென்பட்டதை அடுத்து, எதிர்வரும் 17ஆம் திகதி ஹஜ் பெருநாளை கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பெரிய பள்ளி வாசல் அறிவித்துள்ளது.

நேற்று மஃரிப் தொழுகையோடு, கொழும்பு

11

# சீரற்ற காலநிலையால் 239,006 பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 08

தென்னிலங்கையில் அண்மையில் நீடித்த சீரற்ற காலநிலையால் 32 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காணாமல் போயுள்ளார். 16 பேர் காயமடைந்தனர். அத்துடன், 63 ஆயிரத்து 413 குடும்பங்களை சேர்ந்த 2 இலட்சத்து 39 ஆயிரத்து 6 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று, 5 ஆயிரத்து 587 வீடுகள் சேதமடைந்துள்ளன. இதில் 56 வீடுகள் முழுமையாகவும் 5 ஆயிரத்து 531 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்ட இடங்களிலிருந்து வெளியேறிய மக்கள் 1,973 இடங்களில் 7 ஆயிரத்து 639 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

11

# சவேந்திரவின் பதவிக் காலம் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 08

படைகளின் பிரதானியான ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் ஒப்புதலுடன் இந்த பதவிக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வர்த்தமானியும்

11

# பாலின சமத்துவ சட்ட மூலம் அரசமைப்புக்கு முரணானது

## உயர்நீதிமன்றம் வியாக்கியானம்

கொழும்பு, ஜூன் 08

பாலின சமத்துவ சட்டமூலத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் அரசமைப்புக்கு முரணானவை. சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டுமாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதுடன் மக்கள் வாக்கெடுப்புக்கும் செல்ல வேண்டும் என்று உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன சபைக்கு அறிவித்தார்.

அரசமைப்பின் 121(1) பிரிவின் பிரகாரம் உயர் நீதி மன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட 'பாலின சமத்துவம்' என்ற சட்டமூலம்

11

# மொட்டின் உறவை துண்டித்தால் கூட்டணி தொடர்பில் பேச தயார்!


## ஐ. தே.கவிடம் கூறியது சஜித் அணி

கொழும்பு, ஜூன் 08

"பொதுஜன பெரமுன கட்சியுடனான உறவை ஐக்கிய தேசியக் கட்சி முறித்துக்கொண்டால் ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் பேச்சு நடத்தலாம்."- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது. அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில்,

எம்மை இணைத்துக் கொள்வதற்கான தேவைப்பாடு ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருக்கலாம். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையும் திட்டம் எமக்கு இல்லை.

11



வரலாற்று பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் கொடியேற்றத் திருவிழா நடை பெற்றபோது...

# தீவுகளுக்கான படகு சேவையை விரிவாக்கம் செய்ய நடவடிக்கை!

## வடக்கு ஆளுநர் சார்ள்ஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 08

யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதிகளுக்கான பயணிகள் போக்குவரத்துகான படகு சேவையை விரிவாக்க வேண்டும். இறங்குதுறைகள் புனரமைக்கப்பட வேண்டும் என்று வடக்கு ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பேருந்து பயணிகள் எதிர்நோக்கும் பிரச்னைகளை குறைப்பதற்கு ஒருங்கிணைந்த நேர அட்டவணையில் அரச மற்றும் தனியார் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் உரிய அதிகாரிகளுக்கு ஆளுநர் உத்தரவு பிறப் பித்துள்ளார்.

11



# ஜனாதிபதித் தேர்தலில் நான் களமிறங்குவேன்

## விஜயதாஸ ராஜபக்ஷ உறுதி

கொழும்பு, ஜூன் 08

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நான் களமிறங்குவது உறுதி", என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

சிறீ லங்கா சுதந்திர கட்சியின் ஏற்பாட்டாளர்களுடனான சந்திப்பு கொழும்பு - கொடகமையில் நேற்று வெள்ளிக்கிழமை நடை பெற்றது. இதன் பின்னர் செய்தியாளர்களின்

11

# ஜனாதிபதியை அவசரமாக சந்தித்த ஆளும் கட்சியினர்

கொழும்பு, ஜூன் 08

ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பு - பத்தரமுல்லையில் சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

எதிர்கால அரசியல் நிலைமைகள் குறித்து இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது. இதன்போது அனைவரும் இணைந்து செயல்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பொதுஜன முன்னணியின் 31 உறுப்பினர்கள் இந்த சந்திப்பில் பங்கேற்றுள்ளனர். மாவட்ட இணைப்பு செயல்குழுக்களின் தலைவர்களும்

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

அதிகாலை தொலைபேசி மணி அடித்தது. இந்தவேளையில் ஏதேனும் அவசரம் என்றால்தானே தொலைபேசியில் அழைப்பார்கள் என்ற பதற்றத்தில் அழைப்புக்கு பதிலளித்தேன்.

நண்பர் ஒருவர், காலை வணக்கம் சொல்லிவிட்டு, உங்களிடம் ஒரு விளக்கம் கேட்க எடுத்தேன் - என்றார். நேற்று நீண்டநேரமாக தூக்கத்துக்கு போகமுடியாதபடி பல வேலைகள் இருந்ததால் நள்ளிரவை தாண்டிய பின்னரே தூக்கத்துக்கு போயிருந்ததால் அதிகாலை எழும்பியதே ஒரு வகையில் சினத்தைத் தந்தாலும் -அந்த நண்பர் அவசியம் இல்லாமல் எடுக்கமாட்டார் என்பதால், என்ன விளக்கம்? என்றேன்.

"காவாலி- கழிசடை இந்த இரண்டு சொற்களுக்கும் ஏதேனும் வித்தியாசம் இருக்கிறதா?" என்று கேட்டார். எனக்கு எதிரிலே அவர் இருந்திருந்தால் என்ன செய்திருப்பேனோ தெரியவில்லை. ஆனாலும், வந்த கோபத்தை அடக்கிக்கொண்டு சொன்னேன்: "இந்த அகாலவேளையில் ஒருவனை எழுப்பி இப்படிக் கேட்பவனை காவாலி என்கிறோம்..." என்றேன்.

அவர் பகிடியை விடுங்க, சரியான பதிலைச் சொல்லுங்கோ என்றார். எனக்கு அப்போது நித்திரை முழுவதுமாக போய்விட்டது. எழுந்து கட்டிலில் அமர்ந்தவாறு சொன்னேன்: "நமது குழந்தை சற்று குழப்படி என்றால், செல்லமாக நாம் காவாலி பயல் என்போம். அதுவே மற்றவர் குழந்தை குழப்படி செய்தால் கழிசடை என்போம்" என்றேன். அவர் திருப்திப்பட்டதாகத் தெரியவில்லை. தொடர்பைத் துண்டித்துக் கொண்டோம்.

பின்னர் இன்று காலை அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த போதுதான் நண்பர் அதிகாலை கேட்ட விடயம் ஏதோ முக்கியமான அலுவலுக்காகத்தான் இருக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டு அலுவலகத்தில் இருந்த தமிழ் அகராதியை புரட்டினேன்.

காவாலி - மனம்போனபடி நடப்பவன்

கழிசடை - கழிக்கப்பட்ட தலைமுடிபோல இழிந்தவன்

இப்படித்தான் அகராதி விளக்கம் தந்தது. மீண்டும் அழைப்பெடுத்து நண்பருக்கு கூறவேண்டியதாகிவிட்டது.

இனி இன்று எழுதவந்த விடயத்துக்கு வருகின்றேன். நேற்று காலை ஈழநாடு - டான் ரீ. வி. குழுமத்தின் தலைவர் குகநாதனுக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, "சுமந்திரன் எம். பி. நாளை ஏற்பாடு செய்திருக்கும் கூட்டத்தில் நீங்களும் பேசுவதாக இருக்கின்றதே. பேசுகிறீர்களா?" என்று கேட்டேன்.

அவர் சொன்னார், "கொழும்பில் இருக்கிறேன். நாளை வந்து விடமுடியுமோ தெரியவில்லை. வந்தால் கட்டாயம் போவோம் என்றுதான் இருந்தேன். ஆனால், இனி அதற்கு போவதில்லை என்று முடிவெடுத்துவிட்டேன்" என்றார்.

எனக்கு புரியவில்லை. ஈழநாடு பத்திரிகையில் விளம்பரமும் தந்திருக்கிறார்கள். உங்கள் பெயரை வழக்கம்போல - அதாவது, நீங்கள் பாவிப்பதுபோல இல்லாமல் நாங்கள் சுமந்திரனின் பெயரை பாவிப்பதுபோல உங்கள் பெயரையும் எழுதியிருக்கிறார்கள்" என்றேன்.

அதற்கு அவர், தனது பெயருடன் அந்த கூட்டத்துக்கான அழைப்பிதழ் நண்பர் ஒருவரிடமிருந்து வந்ததும், தான் சுமந்திரனுக்கு அனுப்பிய குறுந்தகவலை எனக்கு அனுப்பியிருந்தார். அது இப்படி இருந்தது:

"நான் திரும்பத்திரும்ப சொன்னேன். பெயர போடவேண்டாம். நான் முடிந்தால் கட்டாயம் வருவேன். வந்தால் கட்டாயம் பேசுவேன்" என்று. நீங்களும் அதனை ஏற்றுக்கொண்டீர்கள். "பெயர் போடவில்லை. கட்டாயம் வாருங்கள் - பேசுங்கள்" என்றீர்கள். ஆனால், இப்போது நீங்கள் பெயரை போட்டு துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளீர்கள். இது எந்த வகையிலும் நியாயமானது அல்ல. நான் இதுபற்றி எழுதிவிட்டு நிகழ்ச்சிக்கு வருவதில்லை என்று முடிவெடுக்கவேண்டியது தவிர்க்க முடியாதது."

எமது நிறுவனத் தலைவர் சுமந்திரனுக்கு அனுப்பிய மேற்படி குறுந்தகவலுக்கு சுமந்திரன் இவ்வாறு பதில் அனுப்பியிருந்தாராம்: "சயந்தன் உங்களோடு பேசி இணங்கியதாக சொன்னார்".

அதற்கு இவர் அனுப்பிய பதில்: "இப்படியானவர்களை அருகில் வைத்திருப்பதுதான் நீங்கள் செய்கின்ற மிகப் பெரிய தவறு. தெரியாமல் செய்தால் பரவாயில்லை. நீங்கள் தெரிந்து கொண்டே தவறு செய்வது புரிந்து கொள்ள முடியாதது."

சயந்தன் அப்படி சொல்லியிருந்தாலும் அவர் சொல்வது சரியா? உங்கள் பெயரை போடுகிறோம் என்று கேட்டிருக்கவேண்டியது சுமந்திரன் போன்ற பொறுப்புள்ளவர்களின் பணி. அவர்தான் மனம்போனபடி நடப்பவர் என்றால், தன்னோடு இருப்பவர்கள் எத்தகையவர்கள் என்பதையாவது அவர் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

அதைவிட கவனத்துக்குரியது, சயந்தன் எமது நிறுவனத் தலைவருக்கு அந்த நிகழ்ச்சியின் அழைப்பிதழை அனுப்பியபோது அதன் முதல் பக்கத்தை மாத்திரமே அனுப்பியிருந்தாராம். அதாவது, அவர் பெயர் போடப்பட்ட பகுதியை தவிர்த்தே அனுப்பியிருக்கிறார். அவர் பெயரை அவர் சம்மதம் இல்லாமலே போடுகின்றோம் என்பதை தெரிந்துகொண்டே அவர் போட்டிருக்கிறார். இவரை எப்படி அழைக்கலாம்? வாசகர்களிடமே விட்டுவிடுகின்றேன்.

**ஊர்க்குருவி.**

## இலங்கை கிரிக்கெட் அணி எதிர்கொள்ளும் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்கிறது அரசு

### அமெரிக்கா பறந்தார் விசேட பிரதிநிதி

கொழும்பு, ஜூன் 08

ரி - 20 உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இலங்கைக் கிரிக்கெட் அணிக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தின் விசேட பிரதிநிதி ஒருவர் நியமிக்கப்பட்டு அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

விமானத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறால் இலங்கை, அயர்லாந்து மற்றும் தென்னாபிரிக்க அணியினர் 7 மணி நேரம் விமான நிலையத்தில் தவித்தனர். இது தொடர்பாக ஐ. சி. சியிடம் இலங்கை கிரிக்கெட் சபை ஏற்கனவே முறையிட்டுள்ளது. இதற்குக் காரணம், ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு விதமாக நடத்தப்பட்டதே.

அமெரிக்க கிரிக்கெட் நிறுவனமும் தற்போது ஐ. சி. சியால் தடை செய்யப்பட்டுள்ளது. இப்படியான ஒரு சூழ்நிலையில் தான் ஐ. சி. சி. ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை அமெரிக்காவில் நடத்துகிறது.- என்றார்.

இதேவேளை, இந்த விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐ. சி. சியின் அநீதிகளுக்கு எதிராக நாம் குரல் கொடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். (எ)

## றோயல்பார்க் கொலையாளியை உடனே சிறையில் அடையுங்கள்!

### சுவீடன் யுவதியின் குடும்பத்தினர் வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 08

றோயல்பார்க் கொலையாளியை உடனடியாக கண்டுபிடித்து அவரை சிறையில் அடைக்க வேண்டும் என்று கொலை செய்யப்பட்ட சுவீடன் யுவதியின் குடும்பத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்

றோயல்பார்க் கொலையாளிக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பை இரத்துச்செய்யும் நீதிமன்றத்தின் உத்தரவை இலங்கையில் பாதிக்கப்பட்ட அனைத்து பெண்களுக்குமான குறிப்பிடத்தக்க தீர்ப்பு என கொலை செய்யப்பட்ட சுவீடன் யுவதி இவோன் ஜோன்சனின் குடும்பத்தவர்கள் தெரிவித்தனர்.

இவான் ஜோன்சனின் குடும்பத்தவர்கள் சார்பில் அவரது சகோதரி கரோலின் ஜோன்சன் விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட அனைத்து பெண்களுக்கும் இதுவொரு குறிப்பிடத்தக்க தீர்ப்பாகும். தன்னிச்சையான முடிவுகளால் பெண்களின் உயிரையும் கண்ணியத்தையும் சமரசம் செய்ய முடியாது என்பதை இந்தத் தீர்ப்பு உறுதிப்படுத்துகின்றது.

இவான் ஜோன்சனை கொலை செய்த குற்றவாளிக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய பொதுமன்னிப்பு தன்னிச்சையானது. சட்டத்தின்கீழ் செல்லுபடியற்றது என்ற உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆழ்ந்த நிம்மதியையும் நீதியையும் தருகின்றது எனவும் கரோலின் குறிப்பிட்டுள்ளார்.

இவானின் துயரமான மற்றும் கொடூரமான இழப்பு எங்களின் இதயங்களில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது. இது எங்களுக்கு மிகப் பெரிய தொடரும் வலியை ஏற்படுத்தியது என்றும் அவர் கரோலின் தெரிவித்துள்ளார். (எ)

## ரூ. 1700 சம்பளம் வழங்காவிட்டால் கம்பனிகள் வெளியேற வேண்டும்!

கொழும்பு, ஜூன் 08

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1,700 ரூபாய் சம்பள விடயத்தில் பெருந்தோட்ட நிறுவனங்கள் தோல்வியைச் சந்தித்துள்ளன. எனவே, உரிய சம்பளத்தை வழங்க முடியாவிட்டால் அரசாங்கத்திடம் தோட்டங்களை ஒப்படைத்துவிட்டு வெளியேற வேண்டும் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள நிலைமையைக் கருத்தில் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலில் வர்த்தமானி ஊடாக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை 1,700 ரூபாயாகப் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

இந்த சம்பள அதிகரிப்பு என்பது வரவேற்கத்தக்க விடயம். ஆனால், அந்தத் தொகையை வழங்குவதற்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் தயாராக இல்லை. வர்த்தமானி வெளியிட்டவுடன் தங்களது நிலைப்பாட்டை தொழில் அமைச்சுக்கு பெருந்தோட்ட நிறுவனங்கள் அறிவித்தன. ஆனால், பெருந்தோட்ட நிறுவனங்களின் நிலைப்பாட்டை தொழில் அமைச்சு ஏற்றுக் கொள்ளவில்லை.- என்றார். (எ)

## கிராம சேவையாளர்களின் போராட்டம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 08

தொழிற்சங்க நடவடிக்கையை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு இலங்கை கிராம சேவையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அதன் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொடர் வேலை நிறுத்தம் நேற்று 36ஆவது நாளாகவும் தொடர்ந்ததை குறிப்பிடத்தக்கது. (அ)

## வெளிநாட்டுப் பெண் கொலை!

கொழும்பு, ஜூன் 08

வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வந்து தனியாக வசித்து வந்த பெண் ஒருவர் நேற்று முன் தினம் இரவு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண் மாவத்தகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிலஸ்ஸ பகுதியிலுள்ள வீடு ஒன்றிற்குள் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு கொலைச் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் உயிரிழந்த பெண் 62 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

படுகொலை தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
08.06.2024 சனிக்கிழமை
குரோதி வருடம், வைகாசி 26

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் மக்கள் விரும்பும் அரசியல் தீர்வு

தான் ஜனாதிபதியானால் நாட்டின் இறையாண்மைக்கு பாதகமில்லாமல் தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை வழங்குவேன் - என்று சஜித் பிரேமதாஸ தெரிவித்திருகின்றார். அதேவேளை தமிழ், முஸ்லிம் மக்கள் தன்னைத்தான் ஆதரிப்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார். முதலில் நாட்டின் இறையாண்மை என்பதால் சஜித் என்ன புரிந்து கொள்கிறார் என்பது முக்கியம். ஏனெனில், நாட்டின் இறையாண்மை என்னும் பெயரில் பெரும்பாலான விடயங்களை நிராகரிக்க முடியும்.

உதாரணமாக அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை நிராகரிக்க முடியும் - வடக்கு, கிழக்கு இணைப்பை நிராகரிக்க முடியும் - இவ்வாறு பல விடயங்களை எதிர்க்க முடியும் அல்லது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஏனையோர் அவ்வாறு எதிர்கின்றபோது அதனை மௌனமாக அங்கீகரிக்க முடியும். கடந்த காலத்தில் நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் இறைமை என்னும் பெயரில்தான் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

யுத்தம் நிறைவுற்று பதினைந்து வருடங்களாகின்றன. இந்தக் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்கும் முயற்சிக்கு மாறாக மேலும் புதிய பிரச்னைகளை ஏற்படுத்தும் விடயங்களே நடைபெற்றிருந்தன. வடக்கு, கிழக்கில் பௌத்தமயமாக்கல் தீவிரப்படுத்தப்பட்டன. சிறியசிறிய பிரச்னைகளுக்கு தீர்வை தேடும் நிலைமை திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது. இந்த விடயங்களில் சஜித் பிரேமதாஸவுக்கு நேரடியான தொடர்பு இல்லையென்று கூற முடியுமானாலும் இந்தக் காலத்தில் நடைபெற்ற பல பிரச்னைகளின்போது அதனை கண்டிக்கும் பலமான குரலாக சஜித் இருந்திருக்கவில்லை. இதேபோன்றுதான் ரணில் விக்கிரமசிங்கவும் இருந்தார்.

தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் நியாயமான அரசியல் தீர்வுக்கு ஆதரவாக பேசுவதும் - அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர் எதிர்ப்பை கருத்தில் கொண்டு பின்வாங்குவதும் தென்னிலங்கை அரசியலுக்கு புதிதல்ல. இதன் காரணமாகவே தென்னிலங்கை வேட்பாளர்கள் எவரையும் நம்ப முடியாதென்னும் குரல்கள் தமிழ் மக்கள் மத்தியில் மேலெழுந்திருக்கின்றன.

தேர்தல் கால வாக்குறுதிகளை நம்பக்கூடிய நிலையில் தமிழ் மக்கள் இருக்க வேண்டுமென்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் கருதக்கூடாது. ஏனெனில், கடந்த காலங்களில் ஒரு தீர்வை நோக்கி செல்வதற்கு விடுதலைப் புலிகள் தடையாக இருக்கின்றனர் என்றே கூறப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால், யுத்தம் முடிவுற்றதன் பின்னர் எந்தவோர் ஆக்கபூர்வமான தீர்வு முயற்சிகளிலும் தென்னிலங்கை ஈடுபாட்டை காண்பிக்கவில்லை.

யுத்தத்தின்போது பயன்படுத்திய தீர்வு தொடர்பான தென்னிலங்கை சொற்களும் - யுத்தத்தை வெற்றிகொண்டதன் பின்னர் தென்னிலங்கை பயன்படுத்திய சொற்களும் முற்றிலும் வித்தியாசமானவை. தமிழ் மக்கள் பேரம் பேசுவதற்கான பலத்துடன் இருந்தபோது தென்னிலங்கை அதிகார மையம் தமிழ் மக்களின் நியாயத்தை ஏற்றுக்கொள்வதான தோற்றத்தைக் காண்பித்தது. ஆனால், பலத்தை இழந்த பின்னர் ஆகக்குறைந்த கோரிக்கைகளைக்கூட ஏற்றுக்கொள்வதற்கு இணங்கவில்லை.

உண்மையில், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தால் கடந்த பதினைந்து வருடங்களில் சில பிரச்னைகளை தீர்த்திருக்க முடியும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. காரணம், தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை ஏற்றுக்கொள்வதற்கான மனோநிலையில் தென்னிலங்கை இல்லை என்பதாகும். இந்த நிலையில், சஜித் பிரேமதாஸ தமிழ் மக்கள் விரும்பும் தீர்வை, தான் வழங்குவேன் என்று கூறுவதை எவ்வாறு ஏற்றுக்கொள்வது?

## மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி, ஜூன் 08

பருத்தித்துறை - தென்புலோலி - காந்தியூர் - கோட்டத்துறை - வேம்படி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணி முதல் 8.15 மணி வரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை காலை 5.15 மணிக்கு ஆரம்பமாகின. இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

நாளை அதிகாலை விசேட பூசை நடைபெற்று காலை 7. 15 மணிக்கு தூபி அபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து காலை 8. 15 மணிக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

## ‘பார்’ திரைப்படம் இன்று திரையிடல்

யாழ்ப்பாணம், ஜூன் 08

1984ஆம் ஆண்டு கௌதம் கோஷ் இயக்கத்தில் வெளியான ‘பார்’ ஹிந்தி திரைப்படம் ஆங்கில உப தலைப்புடன் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு திரையிடப்படவுள்ளது.

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் ஏற்பாட்டில் தந்தை செல்வா கலையரங்கத்தில் (யாழ். மத்திய கல்லூரி அருகில்) திரையிடப்படும் இந்தத் திரைப்படத்தை அனைவரும் இலவசமாக பார்க்க முடியும். (ஐ)

## கதிர்காமத்துக்கான காட்டுப் பாதை 30ஆம் திகதி திறப்பு

காரைதீவு, ஜூன் 08

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காம கந்தன் ஆலயத்தின் ஆடிவேல் திருவிழாவுக்கு செல்லும் பாத யாத்திரிகர்களுக்கான உகந்தை காட்டுப்பாதை எதிர்வரும் 30ஆம் திகதி திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் இந்தக் காட்டுப் பாதை எதிர் வரும் ஜூலை 11ஆம் திகதி மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## சதாவதானி கதிரவேற்பிள்ளை 117ஆவது ஆண்டு நினைவுதினம்!


வடமராட்சி, ஜூன் 08

மேலைப்புலோலி சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 117ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு சதாவதானி சனசமூக நிலைய முன்றலில் சதாவதானி அரங்கில் நடைபெறவுள்ளது.

சதாவதானி அரங்கில் நிலையத் தலைவர் அ. ஜெயநிமலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக அகில இலங்கை இளங்கோ கழக அமைப்பாளர் பரா. ரதீஸும் கௌரவ விருந்தினர்களாக நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சதாவதானி சிக்கன கடன் கூட்டுறவு சங்க தலைவர் நா. சத்திநாதன் ஆகியோர் பங்கேற்பர். (ஐ-2)

## செல்வம் தரும் கறுவா நூல் யாழில் வெளியீடு



யாழ்ப்பாணம், ஜூன் 08


‘செல்வம் தரும் கறுவா’ நூல் வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

கறுவா செய்கைக்கான வழிகாட்டியான இந்த நூலின் தொகுப்பாசிரியர் சுந்தரமூர்த்தி புவனகுமார் வரவேற்புரை - தலைமை உரையை ஆற்றினார். தொடர்ந்து, அறிமுகவுரையை ஓய்வுநிலை ஆங்கில மொழி கற்பித்தல் பேராசிரியர் ம. சரவணபவ ஐயர் நிகழ்த்தினார்.

நூல் மதிப்பீட்டுரையை மூத்த எழுத்தாளரும் சமூக செயல்பாட்டாளருமான வடகோவை வரதராஜன் நிகழ்த்தினார். தொடர்ந்து, வட மாகாண விவசாய பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன், யாழ். மாவட்ட பிரதி மாகாண விவசாய பணிப்பாளர் அஞ்சனாதேவி சிறீரங்கன், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகின் தலைவர் விவியன் சத்தியசீலன் ஆகியோர் உரையாற்றினார்.

தொடர்ந்து கறுவா பயிர் செய்கையில் ஈடுபட்ட பண்ணையாளரின் அனுபவ உரை நடைபெற்றது. பணப்பயிரான கறுவா செய்கையில் கடந்த பத்தாண்டுகளாக ஆர்வமுடன் செயல்பட்டுவரும் சுந்தரமூர்த்தி புவனகுமார் உலகெங்கிலும் இருந்து கொண்டு வந்த கறுவா சார்ந்த பல்வேறு உற்பத்திகள் குறித்தும் அங்கு வருகை தந்தவர்களுக்கு விளக்கினார். நிகழ்வுக்கு வந்திருந்த அனைவருக்கும் குறித்த நூல் இலவசமாக வழங்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**இடபம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**சிம்மம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்கள் நிறைவேறும். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கன்னி**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். நெருங்கியவர்களுக்காக சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். சாதித்துக்காட்டும் நாள்.

**துலாம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசின படுத்த வேண்டாம். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**தனுசு**
கடினமான வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். சகோதர வகையில் பயனடைவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத்திறமை வெளிப்படும். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**மகரம்**
உறவினர் நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். உத்தியோகத்தில் அதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கும்பம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும்.

**மீனம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை உருவாகும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

# அ. தி. மு. க - பா. ஜ. க. கூட்டணி 2026 தேர்தலில் அமையலாம்!

## தமிழிசை சௌந்தர்ராஜன்

சென்னை, ஜூன் 08

அ. தி. மு. கவுடன் கூட்டணியை அமைக்க நாம் வியூகம் அமைத்தோம். ஆனால், அதனை அண்ணாமலை விரும்பவில்லை. கூட்டணி அமைந்திருந்தால் தி. மு. க. ஒன்றில்கூட வென்றிருக்காது. 2026 சட்டமன்றத் தேர்தலில் அ. தி. மு. கவுடன் கூட்டணியா இல்லையா என்பது குறித்து விவாதிக்க இன்னும் காலம் உள்ளது - இவ்வாறு கூறியுள்ளார் பா. ஜ. கவின் தமிழ்நாடு முக்கியஸ்தரான தமிழிசை சௌந்தர்ராஜன்.

அ. தி. மு. கவுடன் நாங்கள் கூட்டணி வைத்திருந்தால் இன்றைக்கு தி. மு. கவுக்கு இத்தனை இடங்கள் கிடைத்திருக்காது என்பது யதார்த்தமான உண்மை. கூட்டணி என்பது ஓர் அரசியல் வியூகம். அந்த வியூகத்தை தி. மு. கவினர், தமிழகத்திலும் அகில இந்திய அளவிலும் பயன்படுத்தியிருக்கின்றனர். இந்த யதார்த்தமான உண்மையை ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும்.

நாங்கள் இரண்டாவதாக வரக்கூடியவர்கள் கிடையாது. வெற்றிபெறக்கூடியவர்கள். எல்லா கூட்டணிக் கட்சிகளின் வாக்குகளை ஒன்றுசேர்த்தால், தி. மு. க வெற்றிபெற்றிருக்க வாய்ப்பே இல்லை என்பது என் உறுதி. ஆனால், கூட்டணி வைப்பதே கட்சியை கீழே கொண்டு போவது என்பதை ஒப்புக் கொள்ளமாட்டேன். நாங்கள் கூட்டணி வியூகத்தை அமைத்தோம். ஆனால், அண்ணாமலைக்கு அதில் விருப்பம் இல்லை. கூட்டணி அமைத்திருந்தால் வென்றிருப்போம் என அண்ணாமலையும், அ. தி. மு. கவினரும் கூட கூறுகிறார்கள்.

தமிழ்நாட்டில் பா. ஜ. க. வெற்றிபெற கடுமையாக உழைக்க வேண்டும். நிச்சயம் 2026இல் தி. மு. க. அரசு கீழே இறக்கப்படும். ஏற்கனவே 7 சதவீத வாக்குகளை தி. மு. க இழந்திருக்கிறது. நாங்களெல்லாம் வெற்றி பெற்றிருக்கவேண்டியவர்கள் - என்றார். (ஐ)

# அ. தி. மு. கவுடன் மீண்டும் கூட்டணிக்கு வாய்ப்பில்லை

## அண்ணாமலை சொல்கிறார்

கோவை, ஜூன் 08

“2026இல் பா. ஜ. க. கூட்டணி ஆட்சிதான் அமையும். அ. தி. மு. கவுடன் மீண்டும் கூட்டணி வைக்க வாய்ப்பு இல்லை என்பது நான் பேசுவதில் இருந்தே தெரிந்திருக்கும்” என பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் கோவை சென்ற அண்ணாமலை செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், “பா. ஜ. கவுடன் கூட்டணி வைத்திருந்தால் 35 இடங்களில் வெற்றி பெற்றிருப்போம் என அ. தி. மு. க. தரப்பில் கூறப்படுவதை பார்த்தால் எடப்பாடி பழனிசாமிக்கும் எஸ். பி. வேலுமணிக்கும் இடையே எதோ பிரச்னை தொடங்கியுள்ளதாக நான் பார்க்கிறேன். 2019இல் ஆளும் கட்சியாக இருந்தபோது கூட அ. தி. மு. கவால் மக்களவை தேர்தலில் ஓர் இடத்தில்தான் வெற்றிபெற முடிந்தது. அ. தி. மு. க. தலைவர்களை மக்கள் நிராகரித்துள்ளனர் என்பதையே 2024 தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன. எனவே எஸ். பி. வேலுமணி சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

தமிழகத்தில் பா. ஜ. க. ஓர் இடத்தில்கூட வெற்றி பெறாததற்கு நான் தான் காரணம் என கூறியுள்ள எஸ். வி. சேகரை எனக்கு யார் என்றே தெரியாது. என்னுடைய செயல்பாடுகளால்தான் பா. ஜ. க. தமிழகத்தில் இரட்டை இலக்க வாக்கு சதவீதத்தை பெற்றுள்ளது - என்றார்.

# தோல்வி குறித்து ஆராய கூடுகின்றது அ. தி. மு. க.

பாராளுமன்றத் தேர்தலில் அடைந்த தோல்வி குறித்து அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் ஆலோசனை கூட்டம் நடக்கவுள்ளது.

அ. தி. மு. கவின் வாக்கு சதவீதம் உயர்ந்துள்ளபோதிலும் தமிழ்நாட்டில் ஒரு தொகுதியில்கூட அ. தி. மு. க. வெல்லவில்லை. ஆனால், தென் தமிழ்நாட்டில் வலிமையான கட்சியாக இருந்த அ. தி. மு. க., இம்முறை சறுக்கியுள்ளது. அங்கு 7 தொகுதிகளில் 5 இல் நேரடியாக களமிறங்கிய அந்தக் கட்சி, 4 தொகுதிகளில் கட்டுப்பணத்தை இழந்தது.

இது அ. தி. மு. வினர் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஓ. பன்னீர்செல்வம், டி. டி. வி. தினகரன், சசிகலா ஆகியோரின் பிளவும் இந்த சறுக்கலுக்கு காரணம். இதனால் மீண்டும் அ. தி. மு. க. ஒன்றுபடுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த நிலையில் சேலத்தில் பாராளுமன்றத் தேர்தலில் அடைந்த தோல்வி குறித்து கட்சி நிர்வாகிகளிடையே ஆலோசிக்கப்படவுள்ளது. இந்த ஆலோசனை கூட்டத்துக்கு பின்னர் சில மாற்றங்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# ராகுல் காந்தியே பாராளுமன்ற குழுவின் தலைவர்

சென்னை, ஜூன் 08

காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவராக ராகுல் காந்தியை தெரிவு செய்ய வேண்டும் என்று சென்னையில் நடந்த அந்தக் கட்சியின் தமிழ்நாடு குழுவின் கூட்டத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நடந்து முடிந்த மக்களவை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி 234 இடங்களில் வெற்றி பெற்றது. காங்கிரஸ் கட்சி மட்டும் 99 இடங்களில் வென்றுள்ளது. அதனால், பாராளுமன்றத்தில் காங்கிரஸ் எதிர்க்கட்சியாக செயல்படவுள்ளது. இந்நிலையில், யார் எதிர்க்கட்சி தலைவராக தெரிவாவார் என்ற எதிர்பார்ப்பு உருவாகியுள்ளது.

இந்நிலையில், தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் அந்தக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி ராகுல் காந்தியை பாராளுமன்ற குழுவின் தலைவராக தெரிவு செய்ய வேண்டும் என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். (ஐ)

# மீன்பிடி தடை 14ஆம் திகதி நீங்குகிறது!

கன்னியாகுமரி, ஜூன் 08

தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி முதல் நடைமுறையிலிருக்கும் ஆழ்கடல் மீன்பிடி தடைக்காலம் எதிர்வரும் 14ஆம் திகதி நிறைவுக்கு வருகிறது.

மீன்பிடி தடை நீங்குவதற்கு இன்னமும் 7 நாட்களே உள்ளதால் மீனவர்கள் விசைப் படகுகளை பழுதுபார்க்கும் பணிகளை விரைந்து முன்னெடுத்து வருகின்றனர். அத்துடன், தங்கள் வலைகளையும் சரிசெய்து வருகின்றனர்.

2 மாதங்களுக்கு பிறகு வருகிற 15ஆம் திகதி முதல் விசைப் படகுகள் கடலுக்கு மீன்பிடிக்க செல்வதால் கன்னியாகுமரி இப்போதே களை கட்ட ஆரம்பித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# கைதடியில் தொடர்ந்துவரும் அரச சாரதிகள் போராட்டம்!

## இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தக்கோரி

யாழ்ப்பாணம், ஜூன் 08

வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம், கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் முன்பாக தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்தி வருகின்றது.



வடக்கு மாகாணத்தில் 5 வருடங்களாக தடைப்பட்டிருந்த சாரதிகளுக்கான இடமாற்றத்துக்கு பிரதிப் பிரதம செயலாளரால், கடந்த வருடம் விண்ணப்பம் கோரப்பட்டு இடமாற்றப் பட்டியலும் வெளியிடப்பட்டிருந்தது.

ஆளுநரின் கோரிக்கைக்கு அமைய பின்னர் அந்த இடமாற்றம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதனால் ஏமாற்றம் அடைந்த அரச சாரதிகள் கடந்த பெப்ரவரி மாதத்தில் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்தனர்.

அதனைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்ட இடமாற்றம், ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என பிரதி பிரதமர் செயலர் எழுத்து மூலம் உறுதிமொழி வழங்கியிருந்தார்.

இந்த நிலையில், குறித்த திகதி வரை இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்படாத நிலையில், அரச சாரதிகள் சங்கம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் முன்பாக இவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# நோர்வே வர்த்தக அமைச்சரை சந்தித்த செந்தில் தொண்டமான்

## கிழக்குக்கு வருமாறு அழைப்பு

கொழும்பு, ஜூன் 08

நோர்வேயின் வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சர் சிசிலி மிர்செத்தை கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் ஒஸ்லோவில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது நோர்வேயின் உதவி எப்போதும் இலங்கைக்கு பக்க பலமாக இருந்துள்ளது என தெரிவித்த செந்தில் தொண்டமான், இலங்கை பெருந்தோட்ட சமூகத்தின் 200 ஆவது வருடத்தின் முதல் நினைவு முத்திரையையும் அமைச்சர் சிசிலி மிர்செத்க்கு வழங்கினார்.

அத்துடன் சிசிலி மிர்செத்தை இலங்கையின் கிழக்கு மாகாணம் மற்றும் பெருந்தோட்டப் பகுதிக்கு விஜயம் செய்யுமாறும் செந்தில் தொண்டமான் அழைப்பு விடுத்தார்.

(அ)

# தடை செய்யப்பட்ட விவசாய பொருட்கள் கற்பிட்டி பகுதியில் கடற்படையால் மீட்பு!

கொழும்பு, ஜூன் 08

இந்தியாவிலிருந்து சட்ட விரோதமாக கொண்டுவரப்பட்ட பெருந்தொகை விவசாய இரசாயனப் பொருட்கள், கற்பிட்டி ஏத்தாளை பகுதியில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி கடற்படையினர், ஏத்தாளை எரம்புகொடல்ல கடல் பிரதேசத்தில் விசேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, இந்தியாவிலிருந்து இயந்திரப் படகு மூலம் ஏத்தாளை கடற்பிரதேசத்திற்கு கொண்டுவரப்பட்ட இரசாயனப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விற்பனை செய்யும் நோக்கில், இவற்றை எடுத்துச் செல்ல முற்பட்டபோதே, கடற்படையினரால் இவ் இரசாயனப் பொருட்கள் பறிமுதலாகின.

இதன்போது, 31 மூடைகளில் அடைக்கப்பட்ட இரசாயன மருந்துகள், கிருமிநாசினிகள், களை நாசினிகள் மற்றும் நாட்டில் தடை செய்யப்பட்ட இரசாயன உர வகைகள் என்பன மீட்கப்பட்டன.

(அ)

# 4 வயது சிறுமிமீது தாக்குதல்; ஜனாதிபதி ரணில் கண்டனம்

கொழும்பு, ஜூன் 08

அண்மையில் 4 வயது சிறுமி தந்தை ஒருவரினால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கண்டனம் வெளியிட்டுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய தந்தைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இவ்வாறான சம்பவங்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சிறுமியின் நலனுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளதோடு, பாதிக்கப்பட்ட சிறுமிக்கு உதவிகள் வழங்கப்பட வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சிறுவர்கள் இன்றி நாளைய எதிர்காலம் கிடையாது என்பதனை அனைவரும் நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறான சம்பவங்களை தடுக்க சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளதாகவும் சிறுவர்களின் நலன்களை உறுதி செய்வதற்கு அதி உச்ச முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(அ)

# கித்துள், பனை, தென்னை பொருட்களின் தடை நீக்கம்

கொழும்பு, ஜூன் 08

கள்ளு உள்ளிட்ட கித்துள், பனை மற்றும் தென்னை சார்ந்த தயாரிப்புகளை உள்ளூரில் உற்பத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் தொடர்பான தடைகளை நீக்குவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு தேசிய பொருளாதார மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய குழுவினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக கள்ளு உள்ளிட்ட கித்துள், பனை மற்றும் தென்னை சார்ந்த தயாரிப்புகளை உள்ளூரில் உற்பத்தி செய்தல், விநியோகித்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பவற்றுக்கு சிக்கல்கள் காணப்படுவதாகவும், இதனை நிவர்த்தி செய்வதன் மூலம் பாரியளவு வருமானத்தை அரசுக்குப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சினால் இதற்கு முன்னர் இடம்பெற்ற குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமைய, இது தொடர்பில் காணப்படும் சிக்கல்கள் பற்றி கலந்துரையாடி அவற்றைத் தீர்ப்பதற்கு மதுவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் குழுவினால் அழைக்கப்பட்டிருந்தது. இதன்போது இந்த திணைக்களங்களுடன் கலந்துரையாடி இது தொடர்பில் காணப்படும் தடைகளை நீக்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

தேசிய பொருளாதார மற்றும் பௌதிகத் திட்டங்கள் பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே தலைமையில் அண்மையில் கூடியபோதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், வட மாகாணத்தில் தயாரிக்கப்படும் பனங்கள்ளை மொத்தமாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் விநியோகிப்பதற்குக் காணப்படும் தடைகளை நீக்குவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. மேலும், ஏற்றுமதியாளர்களுக்கு வசதியாகவும் முறையாகவும் கித்துள், பனை மற்றும் தென்னை சார்ந்த தயாரிப்புகளை ஏற்றுமதி செய்வதற்கான பொறிமுறை ஒன்றை தயாரிக்குமாறும் குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டது.

கித்துள், பனை மற்றும் தென்னை சார்ந்த தயாரிப்புகளுக்கு வெளிநாட்டில் பாரிய சந்தை வாய்ப்புக்கள் காணப்படுவதாக குழு சுட்டிக்காட்டியது. அதனால் இந்தத் தடைகளை நீக்குவதன் மூலம் எதிர்காலத்தில் பாரியளவு வருமானம் அரசாங்கத்துக்கு வரும் என குழு சுட்டிக்காட்டியது.

அத்துடன், கித்துள், பனை மற்றும் தென்னை சார்ந்த தயாரிப்புகள் தொடர்பான அனைத்து முன்மொழிவுகளும் அடங்கிய அறிக்கையை குழுவுக்கு வழங்குமாறும் இதன்போது அறிவுறுத்தப்பட்டது.

(அ)

# குடும்ப தகராறில் ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை!

கொழும்பு, ஜூன் 08

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தகராறில் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஹெட்டிபொல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிஹிபியாரத்மலை பகுதியில் நேற்று முன்தினம் மாலை இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

43 வயதுடைய நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபர் உயிரிழந்தவரின் மூத்த சகோதரரின் மகன் என்பதுடன், உயிரிழந்தவரின் மகனுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2030ஆம் ஆண்டளவில் விவசாயத்தில் புரட்சி!

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 08

**2030 ஆம் ஆண்டளவில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போட்டி விவசாயத்தை நோக்கிச் செல்ல வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் இடம்பெற்றது.

நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் 25 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், முன்னோடித் திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பான அறிக்கையும் இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஏற்றுமதி சந்தைக்கான பொருட்களை போட்டித்தன்மையுடன் வழங்குவதும், அதன் மூலம் ஏற்றுமதிச் சந்தையை வெல்வதும், அந்நியச் செலாவணி மற்றும் விவசாயப் பொருளாதாரத்தை அதிகரிப்பதும் இந்த திட்டத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் இலக்குகளாகும்.

இந்த இலக்குகளை அடைவதற்காக, குரங்குகள் மற்றும் காட்டு யானைகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் அறுவடைக்குப் பின்னர் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதற்கு பொருத்தமான பொறிமுறையைத் தயாரிப்பது குறித்தும் வெகுவாக ஆராயப்பட்டது.

எதிர்கால ஏற்றுமதி சந்தையில் போட்டியை எதிர்கொள்வதற்கு நவீன தொழில்நுட்பம் இன்றியமையாதது எனவும், விவசாய நிலங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் தலையீடு தேவை எனவும் கலந்துரையாடலில் கலந்து கொண்ட தனியார் துறை பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

இலங்கை எனும் தனித்துவத்துடன் கூடிய பொருட்களை சர்வதேச சந்தைக்கு ஏற்றுமதி செய்வதற்கு தற்போதுள்ள தடைகளை நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையீடு செய்யவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பொலிஸ் நிலையத்துக்குள் திருடிய தம்பதி சிக்கியது!

கொழும்பு, ஜூன் 08

குடும்பத் தகராறு தொடர்பாக முறைப்பாடு செய்வதற்கு வந்த தம்பதியினர், பொலிஸ் நிலையத்திற்குள் பெண் கான்ஸ்டபிள் ஒருவரின் பணப்பையை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாதுவ குரே மாவத்தையில் வசிக்கும் கணவன், மனைவி இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்பதியினர் வாதுவ பொலிஸின் பல்வேறு முறைப்பாடுகள் பிரிவுக்கு முறைப்பாடு பதிவு செய்ய வந்திருந்த நிலையில், பெண் கான்ஸ்டபிளின் பணப்பையை, அருகில் உள்ள மேசை லாச்சிக்குள் இருந்து திருடியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பாணந்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

(அ)

# குருந்துவத்தை தேயிலை ஆலையில் நேற்றுக் காலை பெரும் தீ விபத்து!

கொழும்பு, ஜூன் 08

நாவலப்பிட்டி- குருந்துவத்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருந்துவத்தை கல்பாய பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் தேயிலை தொழிற்சாலை நேற்று தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

அதன்படி நேற்று அதிகாலை 3.45 மணியளவில் தேயிலை தொழிற்சாலையில் உற்பத்திப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை கீழ் மாடியில் இருந்து தீ பரவியதுடன் மூன்றாவது மாடிக்கும் பரவியதாக குருந்துவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்து ஏற்பட்டபோது தேயிலை தொழிற்சாலையில் பல ஊழியர்கள் வேலை செய்துகொண்டிருந்ததாகவும், தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் தேயிலை தொழிற்சாலையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த தேயிலை தூள்கள் தீயில் எரிந்ததுடன் பிரதேசவாசிகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் தீ பரவியதைத் தடுக்க முயற்சித்தபோதிலும் அதனை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் கண்டி மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினர் அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டது.

(அ)

# வசந்த கரன்னகொடவின் மனுவை விசாரிப்பதற்கு அமர்வு நியமனம்

கொழும்பு, ஜூன் 08

முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவினால் சமர்ப்பிக்கப்பட்ட ரிட் மனுவை விசாரிப்பதற்காக ஐவரடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு நியமிக்கப்பட்டுள்ளது.

*2008 ஆம் ஆண்டு கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் அவர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை இரத்து செய்யுமாறு கோரி இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.*

இதன்படி, குறித்த கோரிக்கையை பரிசீலிக்கும் வகையில், இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இது தொடர்பான மனுவை விசாரிப்பதற்காக ஐவர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றக் குழுவொன்றை நியமிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் உத்தரவிட்டார். இது தொடர்பான மனு வரும் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# இந்திய அமைதிப்படையினரால் படுகொலை செய்யப்பட்டோரின் நினைவேந்தல் புத்தூரில்!

யாழ்ப்பாணம், ஜூன் 08

இந்திய அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் புத்தூர் வாதரவத்தையில் இடம்பெற்றது.

உயிரிழந்தவர்களின் உறவுகளால் படுகொலை செய்யப்பட்ட இடத்தில் தீபங்கள் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவேந்தல் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டிருந்து.

*1989ஆம் ஆண்டு வாதரவத்தையில் இந்திய அமைதிப்படையினரால் ஒன்பது பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் நினைவாகவே இந்த நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.*

நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அனந்தி சசிதரன் அஞ்சலியின் பின் கருத்து தெரிவிக்கையில்-



இந்திய அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்கு வந்த இந்திய இராணுவம் பல்வேறு இடங்களில் பொதுமக்களை படுகொலை செய்திருந்தது.

ஆனால் இவ்வாறான படுகொலைக்கு இன்றுவரையும் இந்திய அரசு எவ்வித மன்னிப்பும் கோரவில்லை.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நீதியும் வழங்கப்படவில்லை. தமிழ் மக்களாகிய நாம் இன்றும் ஏதிலிகளாகவே இருந்து வருகிறோம்.

படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவு தூபி போரின் பின் கடந்த 2012ஆம் ஆண்டளவில் இராணுவத்தினரால் உடைக்கப்பட்டது. அந்த நினைவு தூபியை விரைவில் அமைத்து அவர்களை நினைவு கூருவதற்கு வழி செய்யவேண்டும்-என்றார்.

# டெங்கு நோயை கட்டுப்படுத்த பொதுமக்களின் உதவி தேவை!

கொழும்பு, ஜூன் 08

நிலவும் மழையுடனான காலநிலையினால் டெங்கு நோய் பரவும் வீதம் அதிகரிப்பதனால் அதனை பொதுமக்களின் உதவியுடன் மாத்திரமே கட்டுப்படுத்த முடியும் என தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் வைத்தியர் என்.ஆரிப் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

டெங்கு கட்டுப்பாட்டின் போது வீடுகளில் மாத்திரம் இன்றி அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் மதஸ்தலங்கள் ஆகிய அனைத்தையும் சுத்தம் செய்ய வேண்டும் எனவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் வைத்தியர் என்.ஆரிப் தெரிவித்தார்.

இந்த வருடத்தின் கடந்த 5 மாதங்களில் 25,000ற்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதோடு 9 பேர் டெங்கு நோயினால் உயிரிழந்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு நிலைமையுடன் டெங்கு, தொற்றுநோய் மட்டத்திற்கு அதிகரிக்கக்கூடும் என்பதால் நோய் பரவலை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது மிக முக்கியமானது என சுட்டிக்காட்டினார்.

(அ)

# வருடாந்தம் 800 தொன் பிளாஸ்ரிக் கழிவு நீர் நிலைகளில் சேர்வதாகக் கண்டறிவு!

கொழும்பு, ஜூன் 08

வருடாந்தம் 800 தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் நீர் நிலைகளில் சேர்வதாக சுற்றாடல் துறைசார் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் வருடாந்தம் 1,600 பிளாஸ்ரிக் கழிவுகள் ஏற்றுமதி செய்யப்படுவதாக குறித்த மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும தெரிவித்துள்ளார்.

முறையான பிளாஸ்ரிக் மீள் சுழற்சி செயன்முறையின் ஊடாக, சுற்றாடலுக்கு பிளாஸ்ரிக் கழிவுகளால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளமுடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பாராளுமன்ற கட்டடத் தொகுதியிலிருந்து அகற்றப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளை சேகரிப்பதற்கான, விசேட வேலைத்திட்டமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைப் பதவியிலிருந்து நீக்குவதற்கு சதித் திட்டம்!

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 08

**தன்னை பதவியிலிருந்து நீக்குவதற்கான மோசடி நடவடிக்கை இடம்பெற்று வருவதாக பொது நிதி தொடர்பான குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.**

நேற்றைய பாராளுன்ற அமர்வின் போதே அவர் இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

என்னை தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கு பொது நிதி தொடர்பான குழு உறுப்பினர்களிடமிருந்து கையெழுத்து சேகரிக்கப்பட்டு வருகின்றது.

உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் நான் பதவி விலகுவதற்கு தயாராக உள்ளேன்.

பொது நிதி தொடர்பான குழுவின் தலைவராக நான் கடமையாற்றிய போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

சீனி ஊழல் தொடர்பான உண்மைகளை வெளிப்படுத்தி செலுத்தும் வரியை 24 சதவீதமாக குறைக்கும் திட்டத்தை கொண்டு வர முடிந்தது.

மேலும், பொது நிதி தொடர்பான குழுவுடன் தொடர்புடைய பணியாளர்களுக்கு சம்பளம் வழங்க எனது தனிப்பட்ட நிதியைப் பயன்படுத்த வேண்டும்.

இந்த பிரச்னைகள் காரணமாக என் அழுத்தம் அதிகரிக்கும், நான் மரணிக்க நேரிடும். நானும் பதற்றத்தில் உள்ளேன்-என்றார். (அ)

# அனர்த்தங்களால் அழிவுற்ற பாடப்புத்தகங்கள் மீளளிப்பு

கொழும்பு, ஜூன் 08

அனர்த்தங்கள் காரணமாக அழிவடைந்துள்ள பாடசாலை பாடப்புத்தகங்களை மீள வழங்க கல்வி அமைச்சு விசேட வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றில் இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்களிடம் இருந்து அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இது தொடர்பில் வலயக் கல்வி பணிமனையின் ஊடாக அமைச்சுக்கு அறியப்படுத்த முடியும்.

எனவே, எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் வெள்ளம் உள்ளிட்ட அனர்த்தங்கள் காரணமாக தங்களது பாடசாலை புத்தகங்களை இழந்த மாணவர்களுக்கு அதனை மீண்டும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த கூறினார். (அ)

மக்கள் மன்றில்
ஈழத் தமிழர் சுயநிர்ணய உரிமை
பொது நிலைப்பாடும் பொது வாக்கெடுப்பும்

அகவணக்கம்
ஈகைச்சுடரேற்றல்
வரவேற்புரை
திரு. சந்திரலிங்கம் சுகிர்தன்
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)
தலைமையுரை
கௌரவ சி.வி.கே. சிவஞானம்
(பேரவைத் தலைவர், வடக்கு மாகாண சபை)
தொடக்கவுரை
பேராசிரியர் அருணானந்தம் சர்வேஸ்வரன்
(சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்)
கருத்துரைகள்
சிரேஷ்ட சட்டத்தரணி நல்லதம்பி சிறீகாந்தா
(முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)
மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம்
(முன்னாள் அமைச்சர், வடக்கு மாகாண சபை)
திரு. சபாபதி சுப்பையா குகநாதன்
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)
ஜனாதிபதி சட்டத்தரணி M.A. சுமந்திரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)
நிறைவுரை
பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
நன்றியுரை
திரு. இம்மானுவல் தயாளன்
(சமூக செயற்பாட்டாளர்)
நிகழ்ச்சித் தொகுப்பு
சட்டத்தரணி கேசவன் சயந்தன்
(முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர்)

அறிவோர் ஒன்றுகூடும்
அரசியற் கருத்துக் களம்

இடம் : தந்தை செல்வா கேட்போர்கூடம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
காலம்: 2024.06.09, ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பி.ப. 2 மணி 59 நிமிடம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
021-2-27-17-07

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள்!





யாழ்ப்பாணம், ஜூன் 08

கனடா செந்தில்குமரன் நிவாரண நிறுவனத்தின் அனுசரணையில் 64 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகத்திடம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டன.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் வைத்திய அத்தியட்சகர் எஸ்.குமரவேல் மற்றும் புதிய வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் த. காண்டீபன் ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான கனடாதூதுவர் எரிக் வாஸ் கலந்து கொண்டு வைத்திய உதவிப் பொருட்களை கையளித்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் பத்திரண, யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், செந்தில்குமரன் நிவாரண நிறுவண ஸ்தாபகர்.டி .செந்தில்குமரன், யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடம் மற்றும் போதனா மருத்துவமனையின் ஆலோசகர் வைத்தியர் ஆ.தங்கராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி, இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களின் உதவியுடன் நாளாந்தம் 4 நோயாளர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு சேவையை வழங்க முடியும் என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது. (அ)

# 32 ரயில் பயணங்கள் இரத்து!

கொழும்பு, ஜூன் 08

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் இலங்கை ரயில் இயந்திர சாரதிகள் சங்கம் ஆரம்பித்துள்ள பணிப்புறக்கணிப்பு காரணமாக 30 இற்கும் மேற்பட்ட ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக கட்டுப்பாட்டு அறை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை இயக்க திட்டமிடப்பட்ட மொத்தம் 32 சேவைகள் பிற்பகல் 13.00 மணி நிலவரப்படி ரத்து செய்யப்பட்டுள்ளன.

ரயில் இயந்திர சாரதிகளின் பதவி உயர்வு பிரச்னை மற்றும் ஆட்சேர்ப்பில் தொடர்ச்சியான தாமதம் காரணமாகவே இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தொழிற் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# மாலைதீவின் மூத்த குடிமக்கள் வதிவிடத்திற்காக இலங்கைக்கு?

கொழும்பு, ஜூன் 08

மாலைதீவின் மூத்த குடிமக்கள் நிரந்தர வதிவிடத்துக்காக இலங்கைக்கு வருவதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் மூசா ஷமீர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

குறித்த இருவருக்கும் இடையிலான சந்திப்பின்போது இலங்கையின் விசா வழங்கும் முறைமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் புதிய விசா முறைமைகளை அறிமுகப்படுத்தியமைக்காக மாலைதீவு வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு தமது பாராட்டுக்களை தெரிவித்தார்.

அத்துடன் தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பிலும் மாலைதீவு வெளிவிவகார அமைச்சரும் இலங்கை பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சரும் கலந்துரையாடியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடொன்றில் பெருந்தொகை பணம், நகைகள் கொள்ளை!





புன்னைச்சோலை, ஜூன் 08

**மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புன்னைச்சோலை பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு பெருந்தொகை பணம் மற்றும் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. புன்னைச்சோலை பத்திரகாளியம்மன் ஆலயத்துக்கு பின்புறமாகவுள்ள வீட்டிலேயே இந்த துணிகர கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.**

புன்னைச்சோலை பத்திரகாளியம்மன் ஆலயத்தில் நடைபெறும் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக அந்த வீட்டில் வசிப்பவர்கள் வீட்டினை பூட்டி, சாவியை வீட்டினருகே ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டுச் சென்றுள்ளனர்.

பின்னர், வீடு திரும்பியவர்கள், வீட்டில் இருந்த அலுமாரி உடைக்கப்பட்டு, அதிலிருந்த 17 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணமும் நான்கரை பவுண் தங்க நகைகளும் கொள்ளையிடப்பட்டதை பார்த்துள்ளனர். அத்தோடு, அங்கு பொருத்தப்பட்டிருந்த சீசீரிவி கமராவின் கார்ட் டிஸ்க்கும் களவாடப்பட்டிருந்தது.

வீட்டின்மதில்மீதேறி, பாய்ந்து, மறைத்துவைத்திருந்த சாவியை எடுத்து, வீட்டினுள் புகுந்து, கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டார் ஆலயத்துக்கு சென்றுவரும் நேரம் அவதானிக்கப்பட்டே இந்தக் கொள்ளைக் குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், மட்டக்களப்பு மாவட்ட குற்றத்தடயவியல் பொலிஸ் பொறுப்பதிகாரி ரவிச்சந்திரன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் தீவிர விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ)

# விளையாட்டுக் கழகத்தின் புதிய ஜேர்சி அறிமுக நிகழ்வு

அட்டாளைச்சேனை, ஜூன் 08

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்குட்பட்ட மார்க்ஸ் மேன் விளையாட்டுக் கழகத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான மேலங்கி (ஜெர்சி) அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

விளையாட்டுக் கழகத்தின் தலைவர் றிஷாத் ஏ காதர் தலைமையில் அட்டாளைச்சேனை ஹனீபா ஹாஜியார் விடுதியில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும், மெட்ரோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளருமான கலாநிதி சிராஸ் மீரா சாஹீப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ)




# அறுகம் குடா சுற்றுலா பகுதியில் சிரமதானப் பணி முன்னெடுப்பு

பொத்துவில், ஜூன் 08

சுற்றுலாத்துறைக்கு பிரசித்தி பெற்ற அறுகம் குடா கடற்கரை பிரதேசத்தையும் அதனை அண்டியுள்ள சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் நோக்கில் பொத்துவில் சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பொத்துவில் சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த சிரமதானப் பணி, சுகாதார மருத்துவ அதிகாரி எப். எம். உவைஸ் தலைமையில் இடம்பெற்றது.

பொத்துவில் சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயம், அறுகம் குடா ஓட்டோ உரிமையாளர் நலன்புரிச் சங்கம், கிளீன் சிறீ லங்கா அமைப்பு, அறுகம் குடா சுற்றுலா பொலிஸ் பிரிவு ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

“தூய்மையான கடற்கரைப் பிரதேசம்” எனும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்ட சிரமதானப் பணியில் பொத்துவில் சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், அறுகம்பே ஓட்டோ உரிமையாளர் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள், கிளீன் சிறீ லங்கா அமைப்பினர், அறுகம் குடா சுற் றுலா பொலிஸ் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



இதன்போது அறுகம் குடா கடற்கரை பிரதேசத்தில் காணப்பட்ட பொலித்தீன்கள், திண்மக் கழிவுப் பொருட்கள் துப்புரவு செய்யப்பட்டு அகற்றப்பட்டதுடன் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களும் அழிக்கப்பட்டன. மேலும், கடற்கரை பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த தடைகளும் அகற்றப்பட்டன. (எ)

# 25 நாட்களில் மட்டக்களப்புக்கு சென்றது சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழு



மட்டக்களப்பு, ஜூன் 08

யாழ்ப்பாணம் தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து 25 நாட்களில் மட்டக்களப்பு மாவட்டத்தை சென்று அடைந்தது சந்நிதி - கதிர்காமம் பாதயாத்திரை குழு.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களில் பாதயாத்திரையை மேற்கொண்ட இந்தக் குழுவினர் மட்டக்களப்பு மாவட்டத்துக்குள் பிரவேசித்துள்ளனர்.

ஜெயா வேல் சுவாமி தலைமையில் 88 பக்தர்களுடன் சென்ற பாதயாத்திரை குழுவினர் வெருகலம்பதி சிறீ சித்திர வேலாயுதர் சுவாமி ஆலயத்தை அடைந்தனர். அங்கு சிரமதானப் பணியில் ஈடுபட்ட பாதயாத்திரை குழுவினர், கதிரவெளி பனிச்சங்கேணி சிறீ சித்தி விநாயகர் ஆலயத்துக்கு வருகை தந்துள்ளனர். (எ)

# சம்மாந்துறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகராக பிரபாசங்கர் நியமனம்



சம்மாந்துறை, ஜூன் 08

சம்மாந்துறை ஆதார மருத்துவமனையின் புதிய அத்தியட்சகராக காரைதீவைச் சேர்ந்த மருத்துவர் தர்மலிங்கம் பிரபாசங்கர் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

பதில் மருத்துவ அத்தியட்சகராகவிருந்த மகப்பேறு மருத்துவ நிபுணர் றொஹானிடமிருந்து ஆவணங்களைப் பெற்றுக் கொண்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவில் ஐ. நா. நடத்தும் பாடசாலை மீது தாக்குதல்

## 14 குழந்தைகள் உட்பட 40 பேர் பலி!

டெல் அவிவ், ஜூன் 08

**காஸாவில் ஐ. நா. நடத்தும் பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலில் 14 குழந்தைகள், 9 பெண்கள் உட்பட 40 பலஸ்தீனர்கள் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர் என்று அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.**

இஸ்ரேலுக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையே பல மாதங்களாக போர் நடந்து வருவதால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இந்த நிலையில், காஸாவில் ஐ. நா. நடத்தும் பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலில் 14 குழந்தைகள் உட்பட 40 பேர் உயிரிழந்தனர்.

இதேவேளை, மிக அண்மைய தாக்குதல்களில் 68 பலஸ்தீனர்கள் உயிரிழந்ததாகவும், 235 பேர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. சிகிச்சைக்காக காஸா பகுதியை விட்டு வெளியேற வேண்டிய நோய் வாய்ப்பட்ட மற்றும்



காயமடைந்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 25,000 ஐ எட்டியுள்ளது என்றும் தகவல் வெளியாகியுள்ளது. அத்தோடு, குழந்தைகள், பெண்கள் உட்பட பலரும் பட்டினியில் சிக்கித் தவிப்பதாகவும் தெரியவந்துள்ளது. (எ)

# இனி அரச கடமைகளுக்கு இளவரசி திரும்பமாட்டார்



லண்டன், ஜூன் 08

இளவரசி கேத் மிடில்டன் இனி அரச கடமைகளுக்குத் திரும்ப மாட்டார் என்று பரபரப்பு தகவல் வெளியாகியுள்ளது.

இங்கிலாந்து இளவரசி கேத் மிடில்டனுக்கு கடந்த ஜனவரி மாதம் வயிற்றுப் பகுதியில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இதன் பிறகு அவர் பொதுவெளியில் தோன்றாமல் இருந்து வந்தார். இதனால் அவரது உடல் நிலை குறித்து பல்வேறு யூகமான தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தின.

இந்த யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், கடந்த மார்ச் மாதம் அவர் ஒரு வீடியோ வெளியிட்டு, தனக்கு புற்றுநோய் பாதிப்பு இருப்பதை உறுதி செய்தார். வயிற்றுப்பகுதியில் செய்யப்பட்ட சிகிச்சைக்குப் பிறகான சோதனையின்போது புற்றுநோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டதாகவும், குடும்பத்தின் நலன் கருதி அதனை வெளிப்படையாக சொல்லவில்லை என்றும் கூறியிருந்தார். புற்றுநோய் பாதிப்பிலிருந்து அவர் குணமடைந்து வருகிறார்.

இந்த நிலையில், புற்றுநோய்க்கு சிகிச்சை பெறுவதால் கேத் மிடில்டன் இந்த ஆண்டு முழுவதும் பொதுவெளிக்கு வரமாட்டார் என்று ஒரு வாரத்துக்கு முன்பு செய்திவெளியானது. இப்போது புதிய தகவல் வெளியாகியிருக்கிறது. அதில், இளவரசி கேத் மிடில்டன் அரச கடமைகளுக்கு திரும்பாமல் போகலாம் எனக் கூறப்பட்டுள்ளது.

கேத் மிடில்டன், புற்றுநோய் சிகிச்சைக்குப் பிறகு என்னென்ன பணிகளை மேற்கொள்ளலாம் என்பது குறித்து அவரது மருத்துவ குழு மறு மதிப்பீடு செய்து வருகிறது. இங்கிலாந்து மன்னரும், கேத் மிடில்டனின் மாமனாருமான சார்லஸ் ஏற்கனவே புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# இராணுவம் - துணை இராணுவம் மோதல் சூடானில் 100இற்கும் மேற்பட்டோர் பலி!



கார்டோம், ஜூன் 08

சூடானில் இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைகளிடையே நேற்று முன்தினம் நடந்த மோதலில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சூடானில் ஆர். எஸ். எப். துணை இராணுவப் படைகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே சுமார் ஓராண்டுக்கும் மேலாக மோதல் நீடித்து வருகிறது. இந்த மோதலில் இதுவரை சுமார் 14 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். மேலும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் சூடானின் கெசிரா மாகாணத்திலுள்ள வாத் அல்-நவுரா என்ற கிராமத்துக்குள் ஆர். எஸ். எப். துணை இராணுவப் படையினர் புகுந்து தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் மற்றும் முதியவர்கள் உட்பட 100 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு சூடான் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அதே சமயம் சூடான் இராணுவத்தினர் தங்கள் படைகளைத் தாக்க திட்டமிட்டதாகவும், அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வாத் அல்-நவுரா கிராமத்தின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளிலுள்ள இராணுவப் படைத்தளங்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் ஆர். எஸ். எப். துணை இராணுவப் படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவராக மோடி மீண்டும் தெரிவு

டில்லி, ஜூன் 08

இந்திய மக்களவைத் தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு தேசிய ஜனநாயகக் கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டணியின் தலைவராக பிரதமர் மோடி தெரிவு செய்யப்பட்டார். இதன் மூலம் மீண்டும் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்கவுள்ளார்.



இந்தக் கூட்டத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களான பிரதமர் நரேந்திர மோடி, ஜே. பி. நட்டா, அமித் ஷா, ராஜ்நாத் சிங், தெலுங்கு தேச கட்சியின் தலைவரான சந்திரபாபு நாயுடு, ஐக்கிய ஜனதா தளக் கட்சியின் தலைவரான நிதிஷ்குமார், ஜன சேனா கட்சியின் தலைவரான பவன் கல்யாண், மதச்சார்பற்ற ஜனதா தளக் கட்சியின் தலைவரான குமாரசாமி, சிவசேனா (ஷிண்டே பிரிவு) தலைவரான ஏக்நாத் ஷிண்டே, லோக் ஜனசக்தி கட்சியின் தலைவரான சிராக் பஸ்வான் உள்ளிட்ட பலர் பங்கு பற்றினர்.

இது தொடர்பில் பிரதமர் மோடி தனது எக்ஸ் தளத்தில், "தேசிய ஜனநாயகக் கூட்டணியில் கட்சித் தலைவர்களைச் சந்தித்தோம். தேசிய அளவிலான முன்னேற்றத்தையும், பிராந்திய அபிலாசைகளை நிறைவேற்றுவதற்கும் இந்தக் கூட்டணி பாடுபடும். இந்தியாவிலுள்ள 140 கோடி மக்களுக்கும் தொடர்ந்து சேவை செய்வோம் மற்றும் அகண்ட பாரதத்தை உருவாக்க பாடுபடுவோம்" என்றும் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, பிரதமர் மோடி பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகளை தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன. இந்தியாவின் முதல் பிரதமர் நேருவுக்குப் பின்னர், தொடர்ந்து 3 ஆவது முறையாக பிரதமராகும் வாய்ப்பை மோடி பெற்றிருப்பதை பா. ஜ. கவினர் கொண்டாடி வருகின்றனர். (எ)

# அமெரிக்க தூதரகம் மீது துப்பாக்கிப் பிரயோகம்

பெய்ரூட், ஜூன் 08

லெபனான் தலைநகர் பெய்ரூட்டிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகின்றன.

மூவர் தூதரகத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தச் சம்பவத்தை உறுதி செய்துள்ள அமெரிக்கத் தூதரகம், தூதரக வாசலை இலக்கு வைத்து சிறிய ஆயுதங்களைப் பயன்படுத்தி தாக்குதலை மேற்கொண்டனர். லெபனானின் பாதுகாப்புத் தரப்பினர் உட்பட பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த அனைவரும் விரைந்து செயல்பட்டதால் எங்கள் குழுவினரும் பணியாளர்களும் பாதுகாப்பாக உள்ளனர் எனத் தெரிவித்துள்ளது. (எ)

# ஜெருசலேம் அல் அக்ஸா பள்ளிவாசலில் அத்துமீறல்

## இஸ்ரேலுக்கு ஓமான் கண்டனம்

மஸ்கட், ஜூன் 08

ஜெருசலேம் நகரிலுள்ள அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் இஸ்ரேல் இராணுவத்தினர், நெசட் எனப்படும் குழுவினர் அணிவகுத்து சென்று பள்ளிவாசலை தாக்கி, ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஓமான் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்தவை வருமாறு, இந்தச் செயல் இஸ்ரேல் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தச் செயல்கள் அனைத்தும் சர்வதேச சட்டங்களுக்கு எதிரானது. மேலும் இது புனிதத்த



லங்களைப் மதிக்கும் மரபுகளை அப்பட்டமாக மீறும் செயலை பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய அத்துமீறல்களுக்கு ஓமான் அரசின் கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் புரட்சியிலிருந்து இன்னும் ஆட்சியாளர் பாடம் கற்கவில்லை

## சுட்டிக்காட்டுகிறார் அநுரகுமார

கொழும்பு, ஜூன் 08

**மக்கள் புரட்சியில் (அறகலய) இருந்து ஆட்சியாளர்கள் இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமூகம்மீது தற்போதைய இளைஞர்களுக்கு அதிக அக்கறை இருக்கின்றது. அந்த அக்கறையின் காரணமாகவே மக்கள் புரட்சி வெடித்தது. ஆனால் இதனை ஆட்சியாளர்கள் தவறாக புரிந்துகொண்டுள்ளனர். மக்கள் போராட்டத்தை ஏளனப்படுத்தும் விதத்தில் கதைக்கின்றனர்.

இது குடிகாரர்களின் போராட்டம் என விமர்சிக்கின்றனர். விபசாரத் தொழில் ஈடுபடுபவர்களின் போராட்டம் எனவும் கூறுகின்றனர். நாட்டுக்காக போராட முன்வந்தவர்கள் குடிகாரர்களா? அதாவது போராட்டத்தில் இருந்து இந்த அரசு பாடம் கற்றுக்கொள்ளவில்லை என்பதே இதன்மூலம் புலனாகின்றது.

இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் போன்றோரின் அரசியல் தற்போது எவ்வாறு உள்ளது? இதுவா மக்கள் எதிர்பார்த்த மாற்றம்? மக்கள் போராட்டத்தால் ஒளிந்திருந்தவர்களின் மனங்களில் இருந்து அந்த மிருகம் மீண்டும் எழ ஆரம்பித்துள்ளது-என்றார். (அ)



# சு.க. கூட்டணியின் கூட்டம் அம்பாந்தோட்டையில் இன்று

கொழும்பு, ஜூன் 09

சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணியின் முதலாவது பொதுக்கூட்டம் இன்று அம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்டையில் இடம்பெறவுள்ளது.

'நாட்டுக்கு வெற்றி - எதிர்காலத்திற்காக ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் இந்த பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

அதன்படி இன்று பிற்பகல் 2:00 மணிக்கு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ளும் வகையில் பொதுக்கூட்டங்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதில் நிமல் சிறிபால டி சில்வா, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண, துமிந்த திஸாநாயக்க உள்ளிட்ட அமைச்சர்கள், புதிய கூட்டணிக்கு ஆதரவளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், சிவில் ஆர்வலர்கள் உள்ளிட்டோர் இந்தப் பொதுப் பேரணியில் பங்கேற்க உள்ளனர்.

மேலும் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த மக்கள் பேரணியை எதிர்காலத்தில் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகளை உள்ளடக்கிய பாரிய பரந்த கூட்டணியாக கட்டியெழுப்பத் திட்டமிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்சார வாகனங்களின் இறக்குமதிக்கு முதலிடம்!



கொழும்பு, ஜூன் 08

வாகனங்களை இறக்குமதி செய்யும் போது மின்சார மற்றும் ஹைபிரிட் வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

அதற்கான கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாகவும், அது தொடர்பில் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எதிர்காலத்தில் அறிவிக்கும் எனவும் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் மோட்டார் போக்குவரத்து திணைக்கள வளாகத்தில் 'ஆரோக்கியமான சூழலுக்கு பயனுள்ள காணி பாவனை, பசுமையான திணைக்களம்' என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற மரக்கன்று நடும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (அ)

# இலங்கை விமான நிலையங்களில் புதிய கடவுச்சீட்டு முத்திரைகள்!

கொழும்பு, ஜூன் 08

இலங்கையின் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், நாட்டில் உள்ள சர்வதேச விமான நிலையங்களுக்கு வந்து செல்வதற்கும் புறப்படுவதற்கும் புதிய கடவுச்சீட்டு முத்திரைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய, இந்த ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய முத்திரைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கையில் உள்ள ஏனைய சர்வதேச விமான நிலையங்களிலும் புதிய முத்திரைகளின் பாவனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

திணைக்களம் வருகைக்காக நீல நிற முத்திரையையும் புறப்படுவதற்கு பச்சை நிற முத்திரையையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

விமான நிலையத்தைத் தவிர, துறைமுகங்கள் மற்றும் பயணிகள் பயணக் கப்பல்களுக்கும் இதேபோன்ற முத்திரைகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு துறைக்கும் மூன்று தனித்தனி முத்திரைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஹர்ஷ இலுக்பிட்டிய கூறினார்.

1948ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட முத்திரையை விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்கள் பயன்படுத்தி வருவதோடு தற்போது அது பல்வேறு தரப்பினரால் எளிதில் தவறாக பயன்படுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

நகல் எடுக்க முடியாத வகையில் அவை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார். (அ)

# 28 மில்லியன் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 08

நாகர்கோவில் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையில் 70 கிலோகிராம் கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன் முன்னெடுக்கப்பட்ட ரோந்து நடவடிக்கையின் போது, டிங்கி படகிலிருந்து 31 பொதிகளில் பொதியிடப்பட்டிருந்த நிலையில் குறித்த கேரள கஞ்சா தொகை கைப்பற்றப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் பெறுமதி 28 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமென மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 2 சந்தேகநபர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

### சீரற்ற வானிலை காரணமாக

# 15,000 ஏக்கருக்கும் அதிகமான நெற்செய்கை பெரும் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 08

நாட்டில் நிலவிவரும் சீரற்ற வானிலை காரணமாக 15,000 ஏக்கருக்கும் அதிகமான நெற்செய்கைகள் அழிவடைந்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அதிக பயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், விவசாய சேவைகள் திணைக்களத்தின் கணக்கெடுப்பின் பின்னர் பயிர் சேதத்திற்கான இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார்.



இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் மரக்கறிகளின் விலை உயரும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ் பேசும் மக்களின் ஆதரவு சஜித்துக்கே!

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார



கொழும்பு, ஜூன் 08

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சஜித் பிரேமதாசவுக்கே, வெகுவிரைவில் மெகா கூட்டணி மலரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதற்கு பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வந்துள்ளனர். இவர்களில் கள்ளவர்கள் அற்றவர்களை நாம் இணைத்துக்கொள்வோம்.

இந்நாட்டில் உள்ள தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு சஜித்துக்கே, சிங்கள கட்சிகளும் உள்ளன. எனவே, இவை அனைத்தும் இணைந்து பலமான அணி உருவாகும்.

நாட்டில் இன்னும் மூன்று பூரணை (போயா) தினங்கள் முடிந்த பின்னர் சஜித் பிரேமதாசவே ஜனாதிபதியாக இருப்பார், இது உறுதி-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி ரணில்...

பேச்சு நடத்தப்படுகிறது என்று கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் சந்தித்துப் பேசவுள்ளனர் என்று தகவல் வெளியாகியுள்ளது. விரைவில் இந்த சந்திப்பு நடைபெறும் என்றும் இதன்போது, ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவதற்கு சஜித் பிரேமதாஸ ஆதரவளிக்க வேண்டும். பதிலுக்கு சஜித் பிரேமதாஸவுக்கு பிரதமர் பதவியை வழங்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

## 17ஆம் திகதி...

பெரிய பள்ளிவாசலில் ஒன்று கூடிய பிறைக்குழு, கொழும்பு பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபை, ஏனைய முக்கியஸ்தர்களின் மாநாட்டில் துல்ஹஜ் மாதத்துக்கான தலைப்பிறையை உறுதிப்படுத்தியதை அடுத்து ஹஜ் பெருநாளுக்கான திகதி அறிவிக்கப்பட்டது.

இதேவேளை, சவூதி அரேபியாவில் எதிர்வரும் 16ஆம் திகதி ஹஜ் பெருநாள் கொண்டாடப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மொட்டின்...

நாட்டில் பிரதான அரசியல் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியாகும். எனவே, ஐக்கிய தேசியக் கட்சியுடன் பயணிக்கும் எந்த தேவைப்பாடும் எமக்குக் கிடையாது.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவம் தொடர்பில் இருந்த பிரச்னை காரணமாகவே வெளியேறி நாம் சஜித் பிரேமதாஸ தலைமையில் தனிக்கட்சி அமைத்தோம். வெற்றியை நோக்கி எமது கட்சி பயணித்துக் கொண்டிருக்கின்றது. எம்முடன் கூட்டணி அமைப்பதற்கு பல கட்சிகளும் முன்வந்துள்ளன.

பொதுஜன பெரமுன கட்சியுடனான உறவை முறித்துக்கொண்டு சஜித் பிரேமதாஸ தலைமையில் இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் முன்வந்தால் அது பற்றி பேச்சு நடத்தலாம் - என்றார். (அ-ஐ)

## தீவுகளுக்கான...

கடல்வழி போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவது தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் நேற்று ஆளுநரின் செயலகத்தில் நடைபெற்றது. மத்திய - மாகாண அரசுகளின் போக்குவரத்து துறைசார் அதிகாரிகள் அனைவரும் இதில் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட ஆளுநர்,

பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கான சமிக்ஞை கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை ரயில் நிலையங்களுக்கு அருகில் போக்குவரத்து முனையங்களை நிறுவுதல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் ஆளுநர் தனது ஆலோசனைகளை முன்வைத்துள்ளார்.

வடக்கு ரயில் நிலையங்களுக்கு அருகில் காணப்படும் பொருள் களஞ்சியசாலைகளை உரியவாறு பயன்படுத்த வேண்டும். பயன்பாடு குறைந்த களஞ்சியசாலைகளை தனியாரிடம் வழங்கி அவற்றை மேம்படுத்த வேண்டும். போக்குவரத்துத் துறையை மேம்படுத்துவதனூடாக பொருளாதார அபிவிருத்திகளை அடைய முடியும்.

எதிர்வரும் ஒன்றரை மாதங்களுக்குள் ரயில் பாதை புனரமைப்பு பணிகள் நிறைவு செய்யப்படும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான நேரடி ரயில் சேவை மீள ஆரம்பிக்கப்படும் - என்றும் இதன்போது ஆளுநர் கூறினார். (ஐ)

## சவேந்திரவின்...

வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கடந்த ஜூன் 1ஆம் திகதி முதல் எதிர் வரும் டிசெம்பர் 31ஆம் திகதி வரை சவேந்திர சில்வா தற்போதைய பதவியில் தொடர்ந்தும் நீடிப்பார். (ஐ)

## பாலின...

தொடர்பில் உயர் நீதிமன்றம் அளித்த வியாக்கியானத்தை சபாநாயகர் நேற்று வெள ளிக்கிழமை சபையில் வாசித்தார்.

அதில், இந்த சட்டமூலத்தின் ஏற்பாடுகளில் பெரும்பாலானவை அரசமைப்பின் 12ஆவது பிரிவுக்கு முரணானவை. உட்பிரிவு 2இல் உள்ள சரத்து 3 மற்றும் 4 ஆகியன அரசமைப்பின் 9, 10,12, 14(1)(இ) மற்றும் 27(1)(ஜி) ஆகியவற்றுடன் முரணானவை.

அரசமைப்பு 4, 7, 17, 18, 25, 26 மற்றும் 27 ஆகிய பிரிவுகள் 9, 10,12(1), 14(1)(இ), 14(1)(எவ் ) ஆகியன அரசமைப்பின் 27(1)(ப) உட்பிரிவு 5 மற்றும் 6இன் கீழ் அமைக்கப்படவுள்ள கவுன்சிலுக்கு அதிகாரம் வழங்கப்படுவது. சரத்தின் 7உடன் ஒன்றிணைத்து வாசிப்பதுடன், 9, 10,12(1), 14(1)(ங), 14(1)(எவ்) ஆகிய பிரிவுகளுக்கு முரணானவை.

அத்துடன், அரசமைப்பின் 27(1)(ஜி), சரத்தின் 17 மற்றும் 18ஆவது உட்பிரிவுகள், "பாலின மையப்புள்ளி" பணிமனையின் தேவையை அமைக்கிறது. மற்றும் மசோதாவின் 8 முதல் 16 மற்றும் 19 முதல் 24 வரை உள்ள விதிகள், இருப்பு, மேலாண்மை மற்றும் உடற்பயிற்சிக்கான தற்செயலான விதிகள் சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் அரசமைப்பின் 9, 10, 12(1), 14(1)(ங), 14(1)(எவ்) மற்றும் 27(1)(ஜி) ஆகிய பிரிவுகளுக்கு முரணானது - என்றும் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் வழங்கியுள்ளது. (ஐ)

## இந்திய...

இந்திய அரசின் உயர்மட்டத்தினர் பலரை சந்தித்து பேசவுள்ளார்.

இதன்போது, இந்தியா - இலங்கை நாடுகளிடையே பேச்சுகளில் எட்டப்பட்ட திட்டங்களை - குறிப்பாக, இரு நாடுகளையும் தரைவழியாக இணைப்பதற்கான பாலம் அமைக்கும் திட்டத்தை விரைவாக முன்னெடுக்குமாறு இந்திய பிரதமரிடம் ஜனாதிபதி ரணில் கோரிக்கை விடுப்பார்.

அத்துடன், இந்திய பிரதமரை இலங்கைக்கு வருகை தருமாறும் அவர் அழைப்பு விடுப்பார் என்றும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## ஜனாதிபதி...

கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது குறித்து எதிர்வரும் சில நாட்களில் தீர்மானம் எடுக்கப்படும். நாட்டை மீட்டெடுக்கும் வேலைத்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க உள்ளோம். சுதந்திர கட்சி அரசாங்கத்தை அமைக்கவும் தயாராக உள்ளோம்" - என்று இதன்போது விஜதாஸ கூறினார்.

மேலும், சிறீ லங்கா சுதந்திர கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நிறுத்தப்படுவார் என்று அந்தக் கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், தமது கட்சியில் இருந்து கொண்டு வேறொரு கட்சியின் தலைமையை பெற்றுக் கொண்டமைக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் கூறியிருந்தமையும் நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

# இரண்டு நாட்களுக்கு காய்ச்சல் நீடித்தால் உடனடியாக வைத்தியசாலை செல்லவும்!

கொழும்பு, ஜூன் 08

இரண்டு நாட்களுக்கு காய்ச்சல் நீடித்தால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியரிடம் உரிய ஆலோசனைகளை பெறுமாறு தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் சமூக வைத்திய அதிகாரி, விசேட வைத்தியர் அனோஜா தீரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட விசேட வைத்தியர் இதனைக் குறிப்பிட்டார்.

2024ஆம் ஆண்டு இலங்கையில் 25 417 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

குறிப்பாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கண்டி, கேகாலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

டெங்குவைத் தடுப்பதற்கான மிக அடிப்படையான வழி, நுளம்பு பரவலைத் தடுப்பதாகும். அதற்கு வீடுகள், பாடசாலைகள், பணியிடங்களில் நுளம்புகள் உருவாகும் இடங்களை அகற்றுவது பொது மக்களின் பொறுப்பாகும்.

மேலும், காய்ச்சல் ஏற்பட்டால், இரண்டு நாட்களுக்குள் அருகில் உள்ள வைத்தியரை அணுகி, உரிய ஆலோசனை பெற வேண்டும்.

காய்ச்சலைக் கட்டுப்படுத்த 'பரசிற்றமோல்' மாத்திரையை மாத்திரம் உட்கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த காலகட்டத்தில் அதிக காய்ச்சல், வயிற்று வலி, வாந்தி, கடுமையான தலைவலி, வயிற்றுப்போக்கு போன்ற அறிகுறிகள் தென்பட்டால் அதை டெங்கு நோயாகக் கருதுவது மிகவும் அவசியம்.

இந்த அறிகுறிகள் இருந்தால், முதலில் உடல் ரீதியாக ஓய்வெடுப்பது அவசியம்.

அறிகுறிகள் இரண்டு நாட்களுக்கு மேல் நீடித்தால், முழுமையான இரத்த பரிசோதனை செய்து, அரச வைத்தியசாலையில் வைத்திய ஆலோசனை பெற வேண்டும்.

இதற்கிடையில், நீர் மற்றும் கஞ்சி வகைகள், ஜீவனி, இளநீர் மற்றும் எலுமிச்சை போன்ற பானங்களைப் பருக வேண்டும்.

சிவப்பு நிறத்தில் அல்லது செயற்கை இரசாயனங்கள் கொண்ட பானங்களைத் தவிர்ப்பதும் முக்கியம் என்றும் அவர் கூறினார். (அ)

# இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து உயர்வு

கொழும்பு, ஜூன் 08

இந்தியாவில் இருந்து இலங் கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த மாதத்தின் கடந்த ஐந்து நாட்களில் மாத்திரம் 15,666 பேர் வருகை தந்துள்ளதாக அந்த சபை வெளியிட்டுள்ள அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தியாவில் இருந்து 4,347 பேரும், பிரித்தானியாவில் இருந்து 1,360 பேரும், சீனாவில் இருந்து 1,063 பேரும், பங்களாதேஷில் இருந்து 867 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள் ளனர்.

இதன்படி கடந்த மாதத்தில் 112,128 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மதுவரி திணைக்களத்துக்கு 28 வீத வருமான அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 08

மதுவரித் திணைக்களம் ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் 88.7 பில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் மே மாதம் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 69.3 பில்லியன் ரூபாய் வருமானமாக ஈட்டப்பட்டுள்ள நிலையில் இவ்வருடத்தில் வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இது 19 பில்லியன் ரூபா அதிகரிப்பு எனவும் 28 வீதமான அதிகரிப்பு எனவும் மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஜெனரல் எம்.ஜே.குணசிறி தெரிவித்தார்.

மதுவரி திணைக்களமானது கடந்த 2022ஆம் ஆண்டில் 169 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளது.

இது 2023ஆம் ஆண்டில் 179 பில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2023ஆம் ஆண்டில் 9 பில்லியன் ரூபாய் அதிகம் ஈட்டப்பட்டுள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் முதல் ஐந்து மாத இறுதிக்குள் 91.2 பில்லியன் ரூபாயை வரி வருவாயாகப் பெற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் அந்த இலக்கில் இதுவரை 98 வீதம் எட்டப்பட்டுள்ளது.

இம்மாதம் முதல் வாரத்தில் ஏற்பட்ட அவசர நிலை காரணமாக தனது திணைக்களத்திற்கு இரண்டு பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பல மது உற்பத்தி நிறுவனங்கள் தற்காலிகமாக உற்பத்தியை நிறுத்தியதே இதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டில், மதுவரி வீதத்தை 14 வீதமாக உயர்த்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

முந்தைய ஆண்டில், இரண்டு முறை வரி வீதத்தை 40 வீதமாக உயர்த்தியது.

மதுபான உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ள நிலையிலும் இந்த வருமான அதிகரிப்பு நல்ல விடயம் எனவும் ஆணையாளர் நாயகம் மேலும் கூறினார். (அ)

## ஜனாதிபதியை...

இந்த சந்திப்பில் இணைந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறெனினும் இந்த சந்திப்பில் பொதுஜன முன் னணியின் பொது செயலாளர் சாகர காரியவசம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## சீரற்ற...

இதேநேரம், வெள்ள நீரில் நீராடியமை, அவதானமின்றி வீதிகளை கடக்க முயன்றமை போன்ற காரணங்களாலேயே இம்முறை மரணங்கள் அதிகரித்தன என்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கையின் கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள் விரைவில் எட்டப்படும்

## சர்வதேச நாணய நிதியம் நம்பிக்கை

கொழும்பு, ஜூன் 08

**இலங்கையில் தமது திட்ட அளவுருக்களுடன் ஒத்துப்போகும் வெளி வணிகக் கடனாளர்களுடன் விரைவில் ஒப்பந்தங்கள் எட்டப்படும் என்று பலமான எதிர்பார்ப்பை சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ளது.**

இந்தநிலையில், ஜூன் 12 ஆம் திகதி, செயற்குழு ஒன்று கூடி இலங்கை தொடர்பான 2ஆவது மீளாய்வு தொடர்பில் கலந்துரையாடும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார கொள்கை சீர்திருத்தங்கள் நம்பிக்கைக்குரிய முடிவுகளைக் காட்டுவதாக அவர் கூறினார்.

குறிப்பிடத்தக்க சாதனைகளில் விரைவான பணவீக்கம், வலுவான இருப்பு சேர்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சியின் ஊக்கமளிக்கும் அறிகுறிகள் என்பன அடங்கும் என்றும், இவை அனைத்தும் நிதி ஸ்திரத்தன்மையை பராமரிக்கின்றன என்றும் ஜூலி கோசாக் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் கடன் மறுசீரமைப்பின் அடுத்த படிகளாக வெளிப்புற வணிகக் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தைகளை முடிப்பது மற்றும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் கொள்கை அடிப்படையிலான ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவது என்பவையே எஞ்சியுள்ளன என்று ஜூலி கோசாக் தெரிவித்துள்ளார். (அ)

# கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் முரளிதரன் ஓய்வு

கொழும்பு, ஜூன் 08

இசுருபாய கல்வி அமைச்சில் பல்வேறு பதவிநிலைகளில் சேவையாற்றிய கவிஞர் சு. முரளிதரன் நேற்று வெள்ளிக்கிழமை அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். இன்று அவரது அறுபதாவது பிறந்தநாள் ஆகும்.

மலையக மண்ணின் மைந்தரான இவர் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் விசேட தர உத்தியோகத்தர் ஆவார். விஞ்ஞானப் பட்டதாரியாகிய இவர் சிறந்த கவிஞர் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இலங்கையில் ஹைக்கூ கவிதைத் துறையின் முன்னோடியாக இவரைக் குறிப்பிடுவர். இவர் ஆக்கிய கூடைக்குள் தேசம் என்ற ஹைக்கூ கவிதை நூல் புகழ் பெற்ற நூலாக விளங்குகின்றது. இதனைவிட மலையக இலக்கியத் தளங்கள், தியாக இயந்திரங்கள், தீவகத்து ஊமைகள் உள்ளிட்ட பல நூல்களை ஆக்கியுள்ளார்.

விஞ்ஞான ஆசிரியராகத் தனது பணியை ஆரம்பித்து இலங்கை கல்வி நிர்வாக சேவைக்குத் தெரிவாகி கொட்டகலை ஆசிரிய கலாசாலையின் அதிபர் சிறிபாத கல்வியியல் கல்லூரி பீடாதிபதி என ஆசிரிய கல்வித் துறையில் சேவையாற்றி தொடர்ந்து இசுருபாய கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விக் கிளைப் பணிப்பாளர், தமிழ்ப்பாடசாலை அபிவிருத்திக்கான பணிப்பாளர், பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கான பணிப்பாளர் எனப் பல்வேறு பதவி நிலைகளை வகித்து அண்மையில் கடந்த 2024 ஏப்ரலில் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# தற்போதைய நிலையில் நாட்டை ஆளக்கூடிய ஒரே தலைவர் ரணில்!

## சுட்டிக்காட்டுகிறது ஐ.தே.க.

கொழும்பு, ஜூன் 08

"இலங்கையின் தற்போதைய நிலைமையில் நாட்டை ஆளக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. அவர் ஆட்சியில் தொடர வேண்டும் - என ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

"அரகலய போராட்டத்தின் விளைவாகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

அவர் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும். அப்போதுதான் நாடு முன்னேறிச் செல்லும்.

அவர் இல்லையேல் மீண்டும் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடையும்.

மீண்டும் 'அரகலய' போராட்டம் வெடிக்கும்.

எனவே, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை சகல தரப்பினரும் இணைந்து வெற்றியடையச் செய்ய வேண்டும்.

சர்வதேசமும் எமது நாட்டுக்கு உதவிகளை வழங்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்பித்தான் சர்வதேச நாணய நிதியம்

இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்குகின்றது என்பதை நாட்டிலுள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். - என்றார். (அ)

# சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரானார் ரோஹித!

கொழும்பு, ஜூன் 08

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குண வர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.



நடைபெற்ற பொது ஜன பெரமுனவின் நிறைவேற்றுக்குழு , அரசியல் சபை கூட்டத்தில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கொழும்பு விஜேராமையில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத் தில் இந்த கூட்டம் நடை பெற்றது.

எதிர்வரும் தேர்தல் தொடர்பில் கூட்டத்தில் கலந்துரையாடியதாக கட்சியின் பொதுச்செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் தெரிவித்தார்.

அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தொடர்பிலும் கலந்துரையாடப் பட்டுள்ளது.

அவர் மற்றுமொரு கட்சியின் தவிசாளராக பதவியேற்றுள்ளதாக அறிவித்துள்ள நிலையில், அது தொடர்பில் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்ளும் அனுமதியும் நிறைவேற்றுக்குழு மற்றும் அரசியல் சபையிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டதாக சாகல காரியவசம் தெரிவித்தார். (அ)

# அனர்த்தங்களில் இறந்தவர்களுக்கு இரண்டரை இலட்சம் ரூபா இழப்பீடு

கொழும்பு, ஜூன் 08

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்த ஒருவருக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நட்டஈடாக வழங்கப்படும் என அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கல்வி மற்றும் மக்கள் விழிப்புணர்வுப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

மேலும், வீடுகளை சுத்தம் செய்வதற்கு பத்தாயிரம் ரூபா முன்பணமும் வழங்கப்படும் என பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் வீடு சேதங்களுக்கு நட்டஈடு வழங்கப்படும்.

வீட்டின் அளவு மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெறுவதற்கு எடுக்கும் நேரத்தைப் பொறுத்து, வீடு சேதத்திற்கான இழப்பீடு வழங்குவதற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

# ரஷ்ய போர்க்களத்தில் ஆயிரம் இலங்கையர்!

## எதிரணி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 08

ரஷ்யா- உக்ரைன் மோதல் தீவிரமடைந்துள்ள சூழலில், ரஷ்யாவுக்கு கூலிப்படையினராக 1000 இலங்கையர்கள் சென்றிருக்கலாம் எனவும், அதில் 220 பேர் தொடர்பான தகவல்களை ரஷ்ய தூதரகத்தில் தாம் ஒப்படைத்துள்ளதாகவும் சுயாதீன எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் வசந்த யாப்பா பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் நல்லுறவு காணப்படுகிறது. ஆகவே சேவை ஒப்பந்த மில்லாமல் சென்றுள்ள இலங்கையர்கள் குறித்து பொது இணக்கப்பாட்டுக்கு வர முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-



மியன்மார் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு சென்று அங்கு நெருக்கடிக்குள்ளாகியுள்ள இலங்கையர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கும், அவர்களின் விடயத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பிலும் ஆராயுமாறு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எமக்கு ஆலோசனை வழங்கினார்.

இதற்கமைய எதிர்க்கட்சியின் உறுப்பினர்களான ஜே.சி.அலவத்துவெல, சுஜித் சஞ்சய் பெரேரா உட்பட நானும் அண்மையில் மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு சென்று பல்வேறு தரப்பினருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்.

தாய்லாந்து நாட்டில் உள்ள விசேட புலனாய்வு திணைக்களம் ஊடாக அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தால் மியன்மாரில் சைபர் குற்றங்களில் ஈடுபடும் தரப்பினரிடம் அகப்பட்டுள்ள 49 இலங்கையர்களை பாதுகாப்பான முறையில் மீட்க முடியும்.

நேபாளம், உகண்டா ஆகிய நாடுகள் இந்த விசேட புலனாய்வு திணைக்களத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு தமது நாட்டவர்களை காப்பாற்றியுள்ளன.

ஆகவே இவ்விடயம் குறித்து வெளிவிவகாரத்துறை அமைச்சு விசேட கவனம் செலுத்தி, துரிதகரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ)


கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 02.06.1926 மறைவு 05.06.2024



அமரர்

இளையப்பா சட்டநாதர்

( முன்னாள் கிராமசபை உறுப்பினர் )

மறவன்புலோ மண்ணை
நேசித்த மானிடனே!
சமூக சேவகனே! கொடை
வள்ளலே!
உங்கள் இழப்பு, எம் ஊருக்கு பேரிழப்பு
உங்கள் ஆத்மாசாந்தி அடைய
பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி

மறவன்புலவு எஸ்.முரளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.06.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.